1986 மே 14]

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்காக பொது மக்களிடமிருந்து வந்திருக்கிற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு வரும் ஆண்டிலாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா ? மேலும் நீதிமன்றம் அமைக்கிற போதே அதற்கான கட்டிடங்களையும் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டிலே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் அதாவது குற்றவியல் இரண்டாம் வகுப்ப நீதிமன்றம் இருக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் ஆங்கு இதைக் கொணர அரசு பரிசீலிக்கும். ஆனால் நீதிமன்றம் ஏற்படுத்துகிற அதே நேரத்திலேயே நீதிமன்றக் கட்டடமும் கட்டித் தரப்பட முடியும் என்று சொல்வதற்கில்லை. காரணம், நிதி நிலைமைக்கேற்பதான் அதைச் செய்ய முடியும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நீதிமன்றங்களில் குற்றவியல் நீதிபதிகள் இல்லை என்ற குறையைப் போக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒட்டுமொத்தமாக இரண்டு இடங்களில்தான் குற்றவியல் நீதிபதிகள் இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கும் தக்க நடவடிக்கையை உயர்நீதிமன்றம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவி பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே இரண்டு பேரை தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்து உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி தற்போது அந்தக் காலியிடங்கள் நிரப்பப்பட இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைச்சாலை சமையல் கூடங்கள்.

749—(*வினா எண். 6592) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு சமையல் செய்வதற்கு விறகுக்குப் பதிலாக சமையல் கேஸ் பயன்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு சமையல் செய்வதற்கு விறகுக்குப் பதிலாக சமையல் கேஸ் பயன்படுத்தும் உத்தேசம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய நோக்கம் எரிபொருள் என்ற முறையில் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிற விறகுச் செலவைக் குறைக்க வேண்டும் என்பதுதான். கேஸ் சிலிண்டரைப் பயன்படுத்தினால் ஆண்டு ஒன்றுக்கு ஒட்டுமொத்தமாக விறகுக்கு என்ன செலவாகிறதோ அதில் சரிபாதிதான் செலவாகும் என்று புள்ளி விவரங்கள் பல கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அரசு இதை மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விறகுக்குப் பதிலாக கேஸைப் பயன்படுத்துவதால் சிக்கனமும் அதே நேரத்தில் மரங்களை அழிப்பதிலிருந்து அவற்றை காப்பாற்றவும் முடியும் என்ற முறையில் ஒரு முடிவு செய்யப்பட்டு சிறைச்சாலைக்கு என்று ஆராய்வதற்கான ஒரு குறிப்பு இருக்கிறது. பரீட்சார்த்தமாக சென்னையிலே இதை முயன்று பார்த்து மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொன்னேனே தவிர, அது வரவே வராது என்று நான் சொல்லவில்லை. அதை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் அடுப்படியில் விறகுகள் காண்டிராக்டர்கள் மூலமாகத்தான் சப்ளை செய்யப்படுகிறது. அவர்கள் பச்சை மரங்களை வெட்டிக் கொண்டு வந்து, எடை அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக கொடுத்துவிடுகிறார்கள். அது காய்வதன் மூலம் மேலும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. அந்தப் பச்சை விறகுகளை எரிப்பதற்காக சமையல் எண்ணயை அடுப்பில் கொட்டுகின்ற நிலைமை தான் பல சிறைச்சாலைகளில் இருக்கின்றன. ஆகவே தமிழகத்தில் இருக்கிற எல்லா சிறைச்சாலைகளிலும் கேஸ் சிலிண்டர் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படிப் பயன்படுத்தினால் இரண்டு வகையில் தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன் கிடைக்கும் என்பதை உத்தேசித்து அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

1986 மே 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களை அழிப்பதிலிருந்து தவிர்க்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் சிக்கன முறையை உருவாக்க வேண்டும் என்றும் அரசு பரீட்சார்த்தமாக சென்னை சிறையில் அதை இன்டிரடியூஸ் செய்திருக்கிறது என்றுதான் நான் பதில் சொன்னேன். அதை நடைமுறைக்கு விரைவில் கொண்டு வரவேண்டும் என்று தான் அரசு முடிவு எடுத்திருக்கிறது என்றும் ஏற்கனவே நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள வெள்ள நிவாரண நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. பால சுப்பிரமணியன், சா. ஞானசுந்தரம், பாப்பா சுப்பிர மணியன், ப. ந. இராமச்சந்திரன், என். விஜயபாலன், எம். தங்கமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈரப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல், வெள்ளம் சம்பந்தமாக நிவாரணம் அளித்ததில் இடிந்து போன வீடுகளுக்கு 2-வது தடவையாகக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகை சரியாகவும் முறையாகவும் செலவிடப்படாததால், அம் மாவட்ட மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.